


# தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட நிலையில், தற்போது கழக மாவட்டங்கள் புதிதாகப் பிரிக்கப்பட்டதால் ஏற்பட்ட காலியிடங்களுக்கும், பொறுப்பு உயர்வு பெற்ற நிர்வாகிகளுக்கு மாற்றாக நிரப்பப்படாமல் இருக்கும் காலியிடங்களுக்கும் புதிய நிர்வாகிகள் நியமிக்கப்படுகின்றனர்.

அந்த வகையில், இளைஞர் அணியின் முதல் நான்கு மண்டலங்களுக்கு உட்பட்ட மாவட்டங்களில் உள்ள காலிப் பணியிடங்களுக்கு விண்ணப்பித்திருந்த நிர்வாகிகள் நேர்காணல் அடிப்படையில், உரிய பரிந்துரைகளுடன் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரிலும், தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடனும் கீழ்க்கண்டவாறு நியமிக்கப்படுகின்றனர். ஏற்கெனவே நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### சென்னை தெற்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள் :** (1) ம.ஸ்ரீகாந்த், 22, பிள்ளையார் கோயில் தெரு, பெருங்குடி, சென்னை. (2) ஆர்.கே.சந்திரேஷ், 66/36, வால்மீகி தெரு, திருவான்மியூர், சென்னை. (3) த.அசோக்குமார், 12/5, தெற்கு கணேசன் தெரு, ராஜீவ் காந்தி நகர், நெசப்பாக்கம், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை.

### திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர் :** ஆர்.தில்லைகுமார், 110, சிவன் கோயில் தெரு, வடதில்லை, மாம்பாக்கம், ஊத்துக்கோட்டை, திருவள்ளூர்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

**அமைப்பாளர் :** ராயல் எஸ்.அன்பு, 20, வ.உ.சி.தெரு, அரகண்டநல்லூர், கண்டாச்சிபுரம், விழுப்புரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.பாலகிருஷ்ணன், 501, ஆசூர் சாலை, பொன்னங்குப்பம், விக்கிரவாண்டி, விழுப்புரம். (2) அ.விஜயராகவன், 64–ஏ, நடுத்தெரு, தாசர்புரம், திருக்கோவிலூர், விழுப்புரம். (3) கா.நிர்மல்ராஜ், வடக்குத் தெரு, தடுத்தாட்கொண்டூர், திருவெண்ணெய்நல்லூர், விழுப்புரம். (4) சி.பாரதி, வா.பகண்டை, வாக்கூர், விக்கிரவாண்டி, விழுப்புரம்.

### விழுப்புரம் மத்திய மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள் :** (1) செ.மணிகண்டன், 25, ஜி.ஆர்.பி. தெரு, விழுப்புரம். (2) வீ.வீரா (எ) வீரமணி, 433, டாக்டர் கலைஞர் இல்லம், பொய்யப்பாக்கம், விழுப்புரம். (3) இரா.இராஜசேகர், 298, நடுத்தெரு, சுந்தரிபாளையம், வி.அகரம், விழுப்புரம்.

### கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர் :** கோ.முருகன், 46, வள்ளலார் நகர், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி.

### கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர் :** வீஎஸ்.மணி (எ) மணிகண்டன், எஃப்–3, ராயல் அபார்ட்மெண்ட், அண்ணா நகர், கள்ளக் குறிச்சி.

### கடலூர் மேற்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர் :** உ.செந்தில்குமார், 74, தெற்குத் தெரு, கீழ்மாம்பட்டு , பண்ருட்டி, கடலூர்.

### கடலூர் கிழக்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள் :** (1) சி.மரியா மார்ட்டின், 5, 5–வது தெரு, புதுநகர், குறிஞ்சிப்பாடி, கடலூர். (2) அ.ஜெகன், 86/6, சித்தி விநாயகர் கோயில் தெரு, மஞ்சக்கொல்லை, புவனகிரி, கடலூர். (3) இள.விஜயராகவன், கள்ளத் தெரு, மோவூர், காட்டுமன்னார்கோவில் கடலூர்.

### வேலூர் வடக்கு மாவட்டம்

**அமைப்பாளர் :** ரா.டீட்டா சரவணன், 14/10, அண்ணா தெரு, மதி நகர், களிஞ்சூர், வேலூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) கோ.முரளி பாஸ்கர், 1/21, வள்ளிமலை சாலை, பள்ளிக்குப்பம், வேலூர். (2) சி.எழில் குமார், 112, பிள்ளையார் கோயில் தெரு, கொடுக்கந்தாங்கல், விண்ணம்பள்ளி, காட்பாடி, வேலூர். (3) தி.பூ.சரவணன், 58/1, எம்.பி.டி.சாலை, பொன்னை கூட்டுரோடு, திருவலம், காட்பாடி, வேலூர். (4) வி.பிரபு, 1/43, பிள்ளையார் கோயில் தெரு, அன்னங்குடி, இலத்தேரி, கே.வி.குப்பம், வேலூர்.

### வேலூர் தெற்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள் :** (1) ப.விஸ்வநாத், 441, நாயுடு தெரு, மசிகம், பேர்ணாம்பட்டு, குடியாத்தம், வேலூர். (2) சி.திவாகர் (எ) ராகுல், 153, நடுத்தெரு, பலவன்சாத்துக்குப்பம், வேலூர். (3) கி.விஜய், 293, கடை வீதி, அணைக்கட்டு, வேலூர். (4) க.சையத் கௌஸ், 22/24 , கோஷாகுலம் மொய்தீன் தெரு, தரணம்பேட்டை, குடியாத்தம், வேலூர்.

### திருப்பத்தூர் மாவட்டம்

**துணை அமைப்பாளர் :** மு.சரண்ராஜ், வளையல்காரத் தெரு, ஆம்பூர், திருப்பத்தூர்.

### திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர் :** ஆ.தமிழ்க்குடிமகன், 242, மடம் மேல் நகர், மேல் நகர், திருவண்ணாமலை.

### தருமபுரி மேற்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள் :** (1) எல்.மணிவண்ணன், 4/50/1, சாமனூர், பாலக்கோடு, தருமபுரி. (2) ப.கார்த்திக் அமர்நாத், மாயா பஜார் தெரு, பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி.

### சேலம் மத்திய மாவட்டம்

**துணை அமைப்பாளர் :** (1) ரா.ரவி, மகிழகம், அபிராமி கார்டன் செல்லும் வழி, கீழ் போர்டு, பெரிய மோட்டூர், சேலம்.

### சேலம் கிழக்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர் :** (1) த.வரதராஜன், 162, கோபாலபுரம், பெத்தநாயக்கன்பாளையம், சேலம்.

### ஈரோடு வடக்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள் :** (1) து.இந்துகுமார், 1/180, இந்திரா நகர், கொத்தமங்கலம், சத்தியமங்கலம், ஈரோடு. (2) கே.எம்.விஜயகுமார், 12/186, மில்மேடு, உக்கரம், சத்தியமங்கலம், ஈரோடு.

### ஈரோடு மத்திய மாவட்டம்

**அமைப்பாளர் :** சன் சுரேஷ் (எ) பி.ஜி.சுரேஷ்குமார், 765, பெரிய புலியூர், பவானி, ஈரோடு.

**துணை அமைப்பாளர்கள் :** (1) எஸ்.நவநீதன், 93/1, கள்ளுக்கடைத் தோட்டம், செம்படாபாளையம், பூனாச்சி, அந்தியூர், ஈரோடு. (2) ரா.ராஜேஷ், 3/335–ஹெச், பசுமை பார்க், பள்ளக்காட்டூர், சுள்ளிப்பாளையம், பெருந்துறை, ஈரோடு. (3) எம்.எம்.குமார், 3/308, சூரநாயக்கனூர், சீனாபுரம், பெருந்துறை, ஈரோடு. (4) ஏ.பழனிசாமி, 253, மேட்டூர் பிரதான சாலை, சித்தாறு, பவானி, ஈரோடு. (5) து.குணசேகரன், 40, சொக்கநாதமலையூர், பட்லூர், அந்தியூர், ஈரோடு.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 28–01–2026

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

---

நெல்லை கிழக்கு மாணவரணி அமைப்பாளர் – வள்ளியூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாடு!

## பணகுடியில் மொழிப்போர் தியாகிகள் வீர வணக்கநாள் பொதுக்கூட்டம்!

ம.கிரகாம்பெல் - திரைப்பட இயக்குனர் கரு. பழனியப்பன் பங்கேற்பு!பணகுடி பேரூர் செயலாளர் தமிழ்வாணன் தலைமை!

நெல்லை, ஜன. 30 –

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மொழிப் போர்த் தியாகி களுக்கு வீரவணக்கநாள் பொதுக்கூட்டம் பணகுடி புண்ணிய வாளன்புரம் மாதா கோவில் முன்பு மாவட்ட மாணவரணி அமைப்பாளர், வள்ளியூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் பணகுடி பேரூர் செயலாளர் தமிழ்வாணன் தலைமையில் இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எரிச்ஜுடு,வள்ளியூர் பேரூர் செயலாளர் சேதுராமலிங்கம், திசையன்விளை பேரூர் செயலாளர் ஜான்கென்னடி, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் சீனி தாஸ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.நிக ழ்ச்சியை மாவட்ட மகளிர் அமைப்பாளர் மல்லிகா அருள் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

பின்னர் திரைப்பட இயக்குனர் கரு. பழனியப்பன் பேசியதாவது.

வட மாநிலங்கள் பலவும் இந்தி மொழிக்கு இடமளித்ததால், போஜ்புரி போன்ற அவர்களின் சொந்த தாய்மொழிகள் அழிந்து விட்டன.நாங்கள் இந்தி பேச மாட்டோம் என்று சொன்னதால் தமிழ் வாழ்ந்தது; நீங்கள் இந்தி பேசியதால் உங்கள் மொழி அழிந்தது. தற்போது கர்நாடகா,மகாராஷ்டிரா மற்றும் காஷ்மீர் போன்ற மாநிலங்கள் விழித்துக் கொண்டு, இந்திக்கு மாற்றாகத் தங்கள் சொந்த மொழிகளான கன்னடம்,மராத்தி மற்றும் காஷ்மீரி மொழிகளைப் பேசத் தொடங்கியுள்ளன.

தமிழ்நாட்டில் அதிகப்படியான பட்டதாரிகள் உருவானதற்கும், அவர்கள் உலகெங்கும் சென்று பணியாற்றுவதற்கும் காரணம், ஆங்கிலம் கலந்த இருமொழிக் கொள்கையே தவிர இந்தி அல்ல . ”நாங்கள் அனைவரும் கல்லூரியில் படித்து பட்டம் வாங்கியதற்குக் காரணம்,நாங்கள் ஆங்கிலம் படித்ததுதான்.இந்தி தெரியாததால் தான் நாங்கள் கெட்டுப்போகவில்லை,மாறாக வளர்ந்திருக்கிறோம்,

இந்தியாவே மும்மொழிக் கொள்கையை வலியுறுத்திய போது, தொலைநோக்குப் பார்வையுடன் இருமொழிக் கொள்கையை (தமிழ், ஆங்கிலம்) அறிமுகப்படுத்தித் தமிழ்நாட்டைக் காப்பாற்றியவர் பேரறிஞர் அண்ணா,

இந்தி எதிர்ப்பில் உறுதியாக நின்று, ‘இந்திப் பேயை’ விரட்டியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

கலைஞர் அவர்களை விட எதிரிகளுக்கு ஆபத்தானவர் என்றும், மாநில உரிமைகளுக்காகவும், தமிழுக்காகவும்,சமரசமின்றிப் போராடுபவர் திராவிட மாடல் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தான்.

சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசிய ஒற்றை வார்த்தை,அவரை இந்திய அளவிலான தலைவராக உயர்த்தியுள்ளது.கிரேக்கம், லத்தீன், சீனம், சமஸ்கிருதம் ஆகிய செம்மொழிகள் இருந்தாலும், 2000 ஆண்டுகளுக்கு முந்தைய இலக்கியத்தை இன்றும் மக்களால் படித்துப் புரிந்து கொள்ளக்கூடிய ஒரே உயிர்ப்புள்ள மொழி தமிழ் மட்டுமே.

வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில்,இராதாபுரம் தொகுதி மட்டுமல்லாது,தமிழ்நாடு முழுவதும் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் தி.மு.க. வெற்றி பெற வேண்டும். அதுவே மொழிக்கும், இனத்திற்கும் செய்யும் கடமை, ”வரலாறு படைக்கத் தயாராவோம் என்று பேசினார்.

கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானதிரவியம், தொகுதி பார்வையாளர்கள் சுரேஷ் ராஜன், சிவராஜ்,தலைமை கழக பேச்சாளர் கள் உடன்குடி தனபால், சகாய பெபிலா, மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர்கள் ஜார்ஜ் கோசல், நம்பி, சேதுராமலிங்கம், அல்போன்ஸ், ஹரிகிருஷ்ணன்,ஆதி நாராயணன், சந்திரகலா, அனுராதா, பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ அய்யப்பன், கனகராஜ்,எட்வின் வளன்அரசு, சாந்தி சுபாஷ், ஒன்றிய செயலாளர்கள் அலெக்ஸ் அப்பாவு, போர்வெல் கணேசன்,வேலங்குளம் கண்ணன், ராஜன், ஆரோக்கிய எட்வின்,செல்வக் கருணாநிதி,சுடலைக்கண்ணு, சுபாஷ் தங்கபாண்டியன்,களக்காடு நகர செயலாளர் மணி சூரியன், பேரூர் செயலாளர்கள் எம்.வானுமாமலை, முருகையா பாண்டியன், அயூப்கான், கசமுத்து, அணி அமைப்பாளர்கள் ஜான்ரபீந்தர், மாடசாமி,ரகு மான், முருகன், ஜெயசீலன்,கமலா நேரு, கேசவன்,சகாயபிரபு, மாவட்ட கவுன்சிலர்கள் பாஸ்கர், சாந்தி சுயம்பு ராஜ், ஜான்ஸ் ரூபா, கிருஷ்ணவேணி உள்பட இளைஞர் அணி நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற நிர்வாகிகள்,வார்டு செயலாளர், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA2,BDA, BLC மற்றும் கழகத்தினர் பொதுமக்கள் உள்பட 2000 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் லெட்சுமணன் நன்றியுரையாற்றினார்.



மதுரை மாநகர் வடக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மதுரை மாட்டுத்தாவணி செய்தியாளர்கள் அரங்கில் இயங்கி வரும் கலைஞர் நூலகத்தை மாவட்டக் கழகச் செயலாளர் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கோ தளபதி நேரில் ஆய்வு செய்தார்.

---

## சிவகங்கையில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் – மு.தென்னவன் – சேலம் சுஜாதா சிறப்புரை!

சிவகங்கை, ஜன. 30 –

கழகத் தலைவர் முதல்வர் தளபதி உத்தரவின் பேரில் சிவகங்கை மாவட்ட மாணவரணி சார்பில் சிவகங்கை நகர் சண்முகராஜா கலையரங்கில் மொழிப்போர்த் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் வரவேற்றுப் பேசினார்.

இந்த கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், தலைமை கழக பேச்சாளர் சேலம் சுஜாதா, மாநில மாணவரணி இணைச் செயலாளர்கள் ஜே.ராமகிருஷ்ணன், திருமதி பூர்ண சங்கீதா சின்னமுத்து, தலைமைக் கழக பேச்சாளர் சி.ராஜபாரதி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன்,மாவட்ட கழக துணை செயலாளர்கள் த. சேங்கைமாறன் , திருமதி ஜோன்ஸ் ரூசோ, ஆகியோர் பேசினார்கள். இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர் ராஜாஅமுதன்,,சந்திரசேகரன், முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன், நகர் கழகச் செயலாளர்கள் க.பொன்னுச்சாமி ,பெரி.பாலா, காரைக்குடி மாநகர செயலாளர் துணை மேயர் நா.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே. எஸ்.ரவி,பி.டி.ஆர்.முத்து, ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம் .ஜெயராமன் திருமலை முத்துராமலிங்கம், பெ.மந்த காளை, மா.அண்ணாதுரை, துரை.ராஜாமணி, அ.முத்துசாமி, ஆறு.செல்வராசன், வே. தமிழ்மாறன், கா. வெங்கட்ராமன், ஆர் .எம் .கென்னடி , யோக. கிருஷ்ணகுமார், வே .ஆரோக்கியசாமி, நாகனிரவி, வே. பூபால சிங்கம்,லெ. மு. ரவிச்சந்திரன், குன்னக்குடி சுப்பிரமணியன், சுப. சின்னத்துரை கே. எஸ் .ஆனந்த் , எஸ். சண்முக வடிவேல்,கே. பாலசுப்பிரமணியன் ,பூமணி ,பி. செல்வராஜ்,நா. நெடுஞ்செழியன், சுப்பிரமணியன் ,பேரூர் கழகச் செயலாளர்கள் கதிர்வேல், ஆர்.கார்த்திகேயன், பி.ஏ. நஜ்மூதீன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன். மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய், மானாமதுரை நகர் மன்ற துணைத் தலைவர் பாலா சுந்தர் ,ஒன்றிய துணைச் செயலாளர் எஸ் முத்துக்குமார் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் முருகானந்தம் ஒன்றிய, நகர் பேரூர் கழக நிர்வாகிகள் ஜெயகாந்தன், வீனஸ் ராமநாதன், முருகேசன்,மதார், மலைமேகு,விவசாய அணி காளிமுத்து, தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் காளிமுத்து ,கண்ணன்உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் மேடையில் வைக்கப்பட்டிருந்த மொழிப்போர்த் தியாகிகள் உருவப்படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**குடந்தை பத்மநாபன்**
**சனவரி 30 (1989)**



குடந்தை வட்டக் கழகமாக இருந்தபோது முதல் வட்டச் செயலாளராகவும், அடுத்து குடந்தையின் முதல் நகரக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

1962ஆம் ஆண்டு விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டுகாலம் சிறையிலிருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.